ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/0784/2018

பெருநகர சென்னை மாநகராட்சி

மழைநீர் வடிகால் துறை

# அறிவிப்பு

சிறப்பு அதிகாரி (மன்றம் ) தீர்மான எண்.285/2018, நாள்.09.04.2018ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் சாலைப் பணிகள் மற்றும் கட்டடப் பணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் கடந்த 10 (பத்து) ஆண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒப்பந்தத்தில் கலந்து கொண்டதற்கான ஆதாரத்துடன் ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பித்துக் கொள்ள சிறப்பு நிகழ்வாக பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒருமுறை இவ்வருடம் 2018 ஏப்ரல் -1ம் தேதி முதல் ஜீலை 31-ம் தேதிக்குள்ளாக பதிவை புதுப்பித்தல் நடைமுறை மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், இரண்டு வருடத்திற்கு ஒரு முறை புதுப்பித்தல் நடைமுறையை பின்பற்றப்படும். எனவே, 2016 – 17 ஆம் ஆண்டிற்கு முன்பு ஒப்பந்ததாரர் பதிவு மேற்கொண்டவர்கள் 2018 – 19 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம். மேலும், 2016 – 17 மற்றும் 2017 -18 ஆம் ஆண்டு ஒப்பந்தததாரர் பதிவு மேற்கொண்டவர்கள் 2019 – 2020 ஆம் ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவு புதுப்பித்துக் கொள்ளலாம். கீழ்க்கண்டவாறு புதுப்பித்தல் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | வகுப்பு | புதுப்பிக்கும் கட்டணம் |
|---|---|---|
| 1. | Class – V | ரூ.5,000/- |
| 2. | Class – IV | ரூ.10,000/- |
| 3. | Class – III | ரூ. 15,000/- |
| 4. | Class – II | ரூ. 20,000/- |
| 5. | Class – I | ரூ.25,000/- |

பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை பதிவு புதுப்பித்தல் முறையை கீழ்கண்டவாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

1. பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜீலை மாதம் 31-ம் தேதிக்குள் கீழ்கண்ட விவரங்களுடன் ஒப்பந்தாரர் பதிவை புதுப்பிக்கவும்.
   அ) வருமானவரி நிலுவையில்லா சான்றிதழ்,
   ஆ)சரக்கு மற்றும் சேவை வரி (GST) சான்றிதழும்,
   இ) ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட விவரங்கள்,
   ஈ) பணிகள் செய்த / செய்து கொண்டுள்ள பணிகளின் விவரங்கள்,
   உ) செல்நிலை சான்றிதழ் பெற்ற சொத்துக்களின் வில்லங்க சான்றிதழ்
2. முதன்முறையாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.
3. இரண்டு முறை (நான்கு வருடங்கள்) தொடர்ந்து ஒப்பந்ததாரர் பதிவை புதுப்பிக்க தவறியவர்கள், ஒப்பந்ததாரர்கள் பட்டியிலிருந்து நிரந்தரமாக நீக்கம் செய்யப்படுவார்கள்.

ஒம்/- எல்.நந்தகுமார் / 12.04.2018

கண்காணிப்பு பொறியாளர்/மநீவது